

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 27.04.2026

# வாக்குப்பதிவும் வதந்திகளும்!

ஏப்ரல் 23 நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் வரலாறு காணாத வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது. 84.51 விழுக்காடு வாக்குகள் பதிவாகி இருக்கிறது. ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குப்பதிவானது அதிக ரித்தே வருகிறது. அந்த வகையில் இந்தத் தேர்தலிலும் வாக்குப்பதிவு அதிகரித்துள்ளது. ஆனால், இதை வைத்து பல்வேறு வதந்திகளை பலரும் கிளப்பி வருகிறார்கள். 'ஆளும்கட்சி மீதான கோபம்' என்று சில சில்லறைகள் முட்டாள் தனமாக ஊடகங்களில் ஊளையிட்டு வருகிறார்கள்.

**கடந்த தேர்தலை விட 30 லட்சம் வாக்குகள் மட்டுமே அதிகம் ஆகி இருக்கிறது.இளைஞர்கள், புதிய வாக்காளர்கள் வாக்கு இந்த தேர்தலில் அதிகம் ஆகிவிட்டது என்று சொல்வதும் உண்மையல்ல. அனைத்து தேர்தலிலும் இளைஞர்கள், புதிய வாக்காளர்கள் வாக்கு அதிகமாகி வருகிறது. படித்தவர்கள் அதிகமாவதும், வேலைக்குச் செல்பவர்கள் அதிகமாவதும், அதன் மூலமாக அரசியல் விழிப்புணர்வு பெற்றவர்கள் அதிகமாவதும் வழக்கமானதுதான். இதனால் வாக்களிப்பவர்களும் அதிகமாகி வருகிறார்கள்.**

விழுக்காடுக்கும் எண்ணிக்கைக்கும் இருக்கும் வேறுபாட்டைப் பார்த்தால் அதிகமான அளவுக்கு வாக்குகள் பதிவாகவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

**சென்னையைப் பொறுத்தவரையில் 2021 தேர்தலில் 24.16 லட்சம் பேர் வாக்களித்தார்கள். இந்த முறை 23.68 லட்சம் பேர் தான் வாக்களித்துள்ளார்கள்.**

**வட மாவட்டங்களில் 2021 தேர்தலில் 1.32 கோடி பேர் வாக்களித்தார்கள். இந்த முறை 1.38 கோடி பேர் வாக்களித்துள்ளார்கள்.**

**மத்திய மாவட்டங்களில் 2021 தேர்தலில் 80.82 லட்சம் பேர் வாக்களித்தார்கள். இந்த முறை 80.64 லட்சம் பேர்தான் வாக்களித்துள்ளார்கள்.**

**மேற்கு மாவட்டங்களில் 2021 தேர்தலில் 1.16 கோடி பேர் வாக்களித்தார்கள். இந்த முறை 1.21 கோடி பேர் வாக்களித்துள்ளார்கள்.**

**தென் மாவட்டங்களில் 2021 தேர்தலில் 1.11 கோடி பேர் வாக்களித்தார்கள். இந்த முறை 1.17 கோடி பேர் வாக்களித்துள்ளார்கள்.**

விழுக்காடு அடிப்படையில் கூடினாலும், எண்ணிக்கை என்பது அவ்வளவு அதிகம் அல்ல. கடந்த 15 ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் குறைந்த அளவில் வாக்குகள் பதிவானது இப்போதுதான் என்று 'தி இந்து' ஆங்கில நாளேடு எழுதி உள்ளது. விழுக்காடு அடிப்படையில் அதிகம் என்றாலும் எண்ணிக்கை அடிப்படையில் குறைவு தான் என்பதை விரிவாக எழுதி இருக்கிறது 'தி இந்து'.

வாக்காளர் பட்டியலை சுத்தம் ஆக்கியதுதான் முதல் காரணம். SIR என்ற பெயரால் ஒரு சதி நடக்க இருந்தது. அதனைத் தடுத்ததும் திராவிட முன்னேற்றக் கழகமே.

SIR ஐ வைத்து பீகாரில் லட்சக்கணக்கான வாக்குகளை நீக்கினார்கள். உண்மையில் இறந்தவர்கள், இடம் பெயர்ந்தவர்கள், இரண்டு இடங்களில் பேர் இருப்பவர்கள் என நீக்கினால் நம்மிடம் எதிர்ப்பு இல்லை. ஆனால் மொத்தம் மொத்தமாக நீக்கினார்கள் பீகாரில். ஒரு தொகுதியில் பட்டியலின மக்களை நீக்கினார்கள். இன்னொரு தொகுதியில் இசுலாமிய மக்களை நீக்கினார்கள்.

பீகாரில் லட்சக்கணக்கான வாக்காளர் பெயர் நீக்கம், அரியானாவில் 25 லட்சம் போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டது, பிரேசில் பெண் ஒருவரது பெயர் அரியானா மாநில வாக்காளர் பட்டியலில் இருப்பது, மகாராஷ்டிரா தேர்தல் மோசடி, கர்நாடகா மகாதேவ்புரா தொகுதி போலி வாக்காளர் சேர்ப்பு என்று பல்வேறு மாநிலங்களில் பலவிதமான மோசடிகள் நடந்தது. இவை எதுவும் தமிழ்நாட்டில் நடந்துவிடாமல் தடுத்தது தி.மு.க.

**"தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பில் உள்ள குறைகள் களையப்பட வேண்டும். உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலை வெளிப்படையாக கடைப்பிடிக்க வேண்டும். உரிய அவகாசம் தரப்பட வேண்டும். எக்கட்சிக்கும் சார்பற்ற நிலையில் தேர்தல் ஆணையம் முதலில் தன் மீதான நம்பிக்கையை நிலைநிறுத்திக் கொள்ள முன் வரவேண்டும். அதன் பிறகு முறைப்படி பின் வரும் காலங்களில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) நடத்தலாம்"** என்று அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி தீர்மானித்தது தி.மு.க. உச்சநீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தேர்தல் ஆணையம் தனது வேலையை நிறுத்தாமல் தொடர்ந்தது. இந்த நிலையில் தேர்தல் ஆணையத்தை கண்காணித்தது தி.மு.க. அந்தப் பணிகளோடு தன்னை இணைத்துக் கொண்டது தி.மு.க.

S.I.R நடவடிக்கைகளுக்குப் பிறகு தமிழ்நாட்டின் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியானது. 97 லட்சத்து 37 ஆயிரத்து 831 வாக்காளர்கள் நீக்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது. இரட்டைப் பதிவு உள்ளவர்களாக 3 லட்சத்து 98 ஆயிரத்து 278 பேர், உயிரிழந்தவர்களாக 26 லட்சத்து 94 ஆயிரத்து 672 பேர், 66 லட்சத்து 44 ஆயிரத்து 881 பேர் இடம் பெயர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டது. SIR பணிகளை தி.மு.க. தீவிரமாக கண்காணித்ததால், அதில் பெரிய அளவில் எதையும் தேர்தல் ஆணையத்தால் செய்ய முடியவில்லை.

பா.ஜ.க. ஆளும் மாநிலமாக இருந்தால் சதி செய்திருப்பார்கள். ஆனால் மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியை மீறி பல்வேறு சதிகளைச் செய்து விட்டதாக அம்மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி குற்றம் சாட்டி வருகிறார். அது போன்ற நிலைமை தமிழ்நாட்டில் இல்லை.

**கடந்த தேர்தலில் 6.41 கோடியாக இருந்த வாக்காளர் பட்டியல், இந்த தேர்தலில் 5.73 கோடியாகக் குறைந்தது. இறந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், இரட்டைப் பதிவு பெற்றவர்கள் நீக்கப்பட்டதே இதற்குக் காரணம். இந்த வகையில் பார்த்தால், கடந்த தேர்தலுக்கும் இந்த தேர்தலுக்குமான வாக்களித்தவர் எண்ணிக்கை ஓரளவு சமம் தான்.**

**விழுக்காடு கணக்கை வைத்துக் கொண்டு, 'ஏதோ தங்களால் தான் வாக்குப்பதிவு அதிகமானது' என்று தற்குறித்தனமாக ஒருவர் அறிக்கைவிடுவது எல்லாம் அறியாமையே தவிர வேறல்ல. தலை சுற்றி விழும் போது, உலகமே தன்னால் சுற்றுவதாக நினைக்கும் முட்டாள் தனமே ஆகும்.**

# FCRA மசோதாவுக்கு எதிராக ஜூன் 28ம் தேதி நாடு தழுவிய உண்ணாவிரதம்!

புதுடெல்லி, ஏப். 27- FCRA மசோதாவுக்கு எதிராக வரும் ஜூன் 28 ம் தேதி நாடு தழுவிய அளவில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவதென அனைத்து கிறிஸ்தவ கூட்டமைப்புகள் சார்பில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொண்டு நிறுவனங்கள் வெளிநாடுகளில் இருந்து நிதி பெறுவதை முறைப் படுத்தும் FCRA சட்டத் திருத்த மசோதாவை ஒன்றிய அரசு கடந்த மார்ச் மாதம் மக்களவையில் தாக்கல் செய்தது. வெளிநாட்டு நிதி உதவி பெறும் தொண்டு நிறுவனங்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டால், அவற்றின் சொத்துக்களை கையகப்படுத்த அரசுக்கு அதிகாரம் அளிக்கும் சட்டப் பிரிவுகள் இந்த மசோதாவில் இடம்பெற்றுள்ளன. இந்த மசோவை எதிர்த்து நாடு முழுவதும் கடும் போராட்டங்கள் வெடித்தன. மக்களவையில் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து இந்த மசோதா கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்நிலையில், சிறுபான்மை அமைப்புகளின் கூட்டு நடவடிக்கைக் குழு சார்பில் தேசிய அளவிலான இணைய வழிக் கருத்தரங்கம் நடைபெற்றது.

மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்களில் பல்வேறு அமைப்புகளின் 150க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

FCRA மசோதாவுக்கு எதிராக வரும் ஜூன் 28ம் தேதி நாடு தழுவிய அளவில் உண்ணாவிரத போராட்டத்தை நடத்துவதென இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா!

# அறிஞர் இரா.இளவரசுவின் பாரதிதாசனியல் பங்களிப்புகள் - கருத்தரங்கம்!

## முனைவர் பழ.அதியமான் – வழக்கறிஞர் அ.அருள்மொழி – புலவர் செந்தலை ந.கவுதமன் சிறப்புரை! முனைவர் ம.இராஜேந்திரன் தலைமை!

சென்னை, ஏப். 27- சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் மொழித் துறை சார்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா -அறிஞர் இரா.இளவரசுவின் பாரதி தாசனியல் பங்களிப்புகள் - கருத்தரங்கம் 29.4.2026 புதன் கிழமை -பிற்பகல் 2 மணியளவில் பவள விழாக் கலையரங்கம், மெரினா வளாகம், சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு தமிழ்மொழித் துறை தலைவர், பேராசிரியர் ய.மணிகண்டன் முன்னிலை வகிக்கிறார்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் முன்னைத் துணை வேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை வகிக்கிறார்.

இவ்விழாவில் முனைவர் பழ. அதியமான் - 'இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்' எனும் தலைப்பிலும்,

வழக்கறிஞர் அ. அருள்மொழி - 'பாவேந்தரின் உலக நோக்கு' எனும் தலைப்பிலும்,

புலவர் செந்தலை ந. கவுதமன் - 'பாரதிதாசனியல் ஆய்வு முன்னோடி இரா. இளவரசு' எனும் தலைப்பிலும் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பை முனைவர் வாணி அறிவாளன், முனைவர் வே. நிர்மலர் செல்வி ஆகியோர் செய்துள்ளனர்.

## தமிழ்நாட்டில் அபரிதமான வளர்ச்சி!

# தி.மு.க. ஆட்சி மீண்டும் அமையும்!

## புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி பேட்டி!



மதுரை, ஏப். 27- புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி, மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் நேற்று முன்தினம் சாமி தரிசனம் செய்தார். பின்னர் அவர் அளித்த பேட்டி வருமாறு:-

தி.மு.க. அரசின் 5 ஆண்டு ஆட்சியில் மகளிருக்கான திட்டங்கள், இளைஞர்களுக்கான திட்டங்கள், விவசாயிகளுக்கான திட்டங்கள், தொழிலாளர்களுக்கான திட்டங்கள் மட்டுமின்றி ஏராளமான வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. நிறைய தொழிற்சாலைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

தி.மு.க. தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாட்டில் அபரிதமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. தி.மு.க. வுக்கும், காங்கிரசுக்கும் கட்டமைப்பு உள்ளது. அ.தி.மு.க.வை பொறுத்தவரை பா.ஜ.வுடன் கூட்டணி சேர்ந்ததால் தோல்வியே கிடைக்கும். தமிழ்நாட்டை பொறுத்த வரை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கண்டிப்பாக மீண்டும் தி.மு.க. ஆட்சி அமையும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## டெல்லி விமானத்தில் தீ விபத்து!

புதுடெல்லி, ஏப். 27–

டெல்லியில் இருந்து ஸ்விட்சர்லாந்தின் ஜூரிச் நகருக்கு புறப்பட்ட விமானத்தின் எஞ்சின் பழுதாகி தீப்பிடித்ததில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

டெல்லி விமான நிலையத்தில் இருந்து விமானம் புறப்படுவதற்காக ஓடுதளத்தில் வேகமெடுத்தபோது, அதன் எஞ்ஜின்களில் ஒன்று பழுதடைந்து தீப்பிடித்தது.

விமானத்தில் இருந்து கரும்புகையும், தீப்பிழம்புகளும் வெளியேறுவதை கண்டு ஊழியர்கள் அவசர கால வெளியேற்ற நடவடிக்கையைத் தொடங்கினர்.

எமர்ஜென்சி பாதையில் பயணிகள் வெளியேற்றப்பட்டனர். தீ விபத்து தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

## வாகன காஸ் தட்டுப்பாடு எதிரொலி:

# சென்னையில் அணிவகுத்து நிற்கும் ஆட்டோக்கள் - 3 மணி நேரம் காத்திருக்கும் அவலம்!

## வாழ்வாதாரத்தை இழந்து தவிப்பதாக ஓட்டுநர்கள் குமுறல்!

சென்னை, ஏப்.27- வாகன காஸ் தட்டுப்பாடு காரணமாக சென்னையில் பங்குகளில் ஆட்டோக்கள் மூன்று மணி நேரத்திற்கு மேலாக வரிசைக்கட்டி நிற்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. வாழ்வாதாரம் இன்றி தவிப்பதாக ஓட்டுநர்கள் தங்களின் குமுறலை தெரிவித்துள்ளனர். தமிழகத்தில், குறிப்பாக சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கடந்த சில நாட்களாக எல்.பி.ஜி ஆட்டோ எரிவாயு தட்டுப்பாடு பெரும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. பெட்ரோல், டீசல் விலையேற்றத்தால் மாற்று எரிபொருளான எல்.பி.ஜிக்கு மாறிய ஆயிரக்கணக்கான ஆட்டோ ஓட்டுநர்கள், தற்போது எரிவாயு கிடைக்காமல் வீதிகளில் வரிசை கட்டி நிற்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

சென்னையின் முக்கியப் பகுதிகளான கிண்டி, வடபழனி, ஆவடி, மற்றும் பூந்தமல்லி போன்ற இடங்களில் உள்ள எரிவாயு விற்பனை நிலையங்களில் அதிகாலை 3 மணி முதலே ஆட்டோக்கள் வரிசையில் நிற்கத் தொடங்குகின்றன.

சில இடங்களில் இந்த வரிசை ஒரு கிலோமீட்டர் தூரத்தைத் தாண்டிச் செல்கிறது. ஒருமுறை டேங்க் நிரப்புவதற்கு ஓட்டுநர்கள் 3 முதல் 5 மணி நேரம் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் அவர்களின் உழைக்கும் நேரம் வீணாகி, சவாரிகள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலை மாற்றம் மற்றும் இறக்குமதியில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் ஒருபுறம் இருந்தாலும், விநியோகச் சங்கிலியில் உள்ள குளறுபடிகளே இதற்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

பல தனியார் எரிவாயு நிலையங்கள் 'ஸ்டாக் இல்லை' என்ற பலகையைத் தொங்கவிட்டுள்ளதால், அரசு எரிவாயு நிலையங்களில் கட்டுக்கடங்காத கூட்டம் கூடுகிறது.

இந்த தட்டுபாடு குறித்து ஆட்டோ ஓட்டுநர்கள் கூறியதாவது:

3 மணி நேரத்திற்கு மேலாக கேஸ் போடுவதற்காக காத்திருக்கிறோம். கேஸ் தட்டுப்பாட்டால் ஒரு நாளில் பாதியளவு நேரம் வரிசையிலேயே கழிந்துவிடுகிறது. மீதமுள்ள நேரத்தில் கிடைக்கும் வருமானம், ஆட்டோ வாடகை மற்றும் அன்றாடத் தேவைகளுக்கே போதுமானதாக இல்லை. இது தவிர, தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி சில இடங்களில் எல்.பி.ஜி விலை சட்டவிரோதமாக உயர்த்திக் கேட்கின்றனர். ரூ.54 கேஸ் விலை இருந்த நிலையில் தட்டுப்பாடு காரணமாக ஒவ்வொரு பங்குகளில் வெவ்வேறு விலை வாங்கப்படுகிறது.

எங்களுக்கு ஆட்டோ ஓட்டினால் தான் வாழ்வாதாரம் அதனால் அந்த விலை கொடுத்து கேஸ் நிரப்பிக்கொள்கிறோம். தேர்தல் அறிவித்த பின் ஓரளவிற்கு எல்.பி.ஜி ஒன்றிய அரசு தமிழகத்திற்கு அனுப்பி கொண்டிருந்தது. ஆனால் இப்போது தேர்தல் முடிந்த நிலையில் கேஸ் தமிழகத்திற்கு ஒன்றிய அரசு அனுப்புமா என கேள்வி குறியாக உள்ளது. இருப்பு வைக்கப்பட்டிருந்த பங்குகளில் கூட இப்போது கேஸ் இல்லாமல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை உடனடியாக சரி செய்ய அரசுகள் முனைப்பு காட்ட வேண்டும்.இவ்வாறு கூறினர்.

இந்த கேஸ் தட்டுப்பாடு காரணமாக ஆட்டோக்கள் தட்டுப்பாடின்றி ஓடாததால், அலுவலகம் செல்பவர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. கிடைக்கும் சில ஆட்டோக்களிலும் தட்டுப்பாட்டை காரணம் காட்டி கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதாகப் பயணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

## தேர்தலுக்காக சொந்த ஊர்களுக்குச் சென்றவர்கள் மீண்டும்

# சென்னை, மற்ற ஊர்களுக்குத் திரும்ப வசதியாக 14,508 சிறப்பு பஸ்கள் இயக்கம்!

சென்னை, ஏப்.27- தேர்தலுக்காக சொந்த ஊர்களுக்கு சென்ற மக்கள் மீண்டும் சென்னை மற்றும் இதர ஊர்களுக்கு திரும்புவதற்கு வசதியாக 14 ஆயிரத்து 508 பஸ்கள் இயக்கப்பட உள்ளது.தமிழக சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நேற்று முன் தினம் நடந்தது. இதை முன்னிட்டு, பொதுமக்கள் தங்களின் சொந்த ஊர்களுக்கு சிரமமின்றி பயணம் செய்து வாக்கு செலுத்த சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன. பொதுமக்களின் வசதிக்காக சென்னையில் இருந்து தினசரி இயக்கக்கூடிய 2,092 பஸ்களுடன் சேர்த்து 10,663 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டது. குறிப்பாக, கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், கோயம்பேடு, மாதவரம் போன்ற போக்குவரத்து வழித்தடங்களில் இருந்து இந்த சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டது. இதன் மூலம் சுமார் 2 லட்சம் பேர் பயணம் மேற்கொண்டனர்.

இந்நிலையில் சொந்த ஊர்களுக்கு சென்றவர்கள் மீண்டும் திரும்புவதற்கு ஏதுவாக சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது. தினசரி இயக்கக் கூடிய பஸ்களுடன், கூடுதல் சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, இன்று மற்றும் நாளை என இரு தினங்களுக்கும் பொதுமக்கள் சிரமமின்றி சென்னைக்கும் மற்ற ஊர்களுக்கும் பயணம் செய்திட ஏதுவாக பஸ்கள் இயக்கப்பட உள்ளன. இன்று சென்னைக்கு தினசரி இயங்கக்கூடிய 2 ஆயிரத்து 92 பஸ்களுடன் கூடுதலாக 1,295 பஸ்களும், முக்கிய ஊர்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கு 2,500 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட உள்ளன. இதேபோல், நாளை சென்னைக்கு தினசரி இயக்கக்கூடிய 2,092 பஸ்களுடன் 3,184 சிறப்பு பஸ்களும், பிற ஊர்களுக்கு 3,345 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட உள்ளன.

மொத்தமாக 14 ஆயிரத்து 508 பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இன்று 19 ஆயிரத்து 676 பயணிகளும், நாளை 47,001 பயணிகளும் பயணத்திற்கான முன்பதிவு செய்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள், கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்தை www.tnstc.in அல்லது செல்போன் செயலி மூலம் முன்பதிவு செய்து பயணிக்கவும் அரசு சார்பில் கேட்டுக் கொண்டுள்ளது. அதுமட்டுமின்றி, சிறப்பு பஸ் இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பஸ் நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.